1975 நவம்பர் 6]

கரூர்-மைலம்பட்டி சாலையில் பாலம்.

*215 விஞ. திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பொதுப்பணி துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

கரூர்-மைலம்பட்டி சாலையில் உள்ள லிங்கத்தூர் வாரியில் பாலம் கட்டும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: போதுமான நிதி வசதி இல்லாததால், இப்பாலம் கட்டும் திட்டம் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

(முற்பகல் 9.30)

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஏறத்தாழ 6 ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் நிதிநிலை சரி இல்லை என்ருல் இது பொருத்தமாக இல்லை. எனவே, இந்தத் திட்டத்தை உடனடியாக எடுத்து நிறைவேற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: 1975 ஆம் ஆண்டு பரிந்துரை செய்யப்பட்டது. ரூ. 7 லட்சம் தேவைப்படும் என்று தலைமைப் பொறியாளர் தெரிவித்திருக்கிருர். நிதிநிலை சரியில்லாத காரணத்தால் இது ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

திருப்புவனம் கண்மாய்

*216 விஞ. திரு. த. சோணையா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்புவனம் கண்மாயின் கீழுள்ள ஆய்க்கட்டுகள் எத்தனை ஏக்கர்கள்?

(இ) இந்த ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் கண்மாய் மராமத்து செய்யும் செயற்குறிப்பு அரசின் ஆய்விலுள்ளதா?

(உ) ஆம் எனில், அதன் மதிப்பீடு என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) திருப்புவனம் கண்மாயின் கீழுள்ள ஆயக்கட்டு 2,030 ஏக்கர்கள்.

(இ) ஆம்.

(உ) ரூ. 30,000.

பெண் கிராம முன்சீப்புகள்.

*317 வினா. **திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராம முன்சீப்களாக பெண்களும் நியமிக்கப் பட்டுள்ளார்களா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) ஒன்பது பெண்கள் கீழ்க்கண்ட மாவட்டங்களில் கிராமத் தலைவிகளாக (கிராம முன்சீப்களாக) நியமிக்கப் பட்டுள்ளனர்:—

மாவட்டம்	எண்ணிக்கை
கோவை	1
சேலம்	2
திருநெல்வேலி	2
வட ஆற்காடு	3
மதுரை	1
மொத்தம்	9

திரு. வை. பாலசுந்தரம்: பெரும்பாலான கிராமங்களில் அரிசனங்கள் கிராம முன்சீப்பாக இல்லை. அரிசனங்களை ஊக்குவிக்கின்ற முறையில் அரிசனங்களை அதிகமாக கிராம முன்சீப்களாக நியமிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.